# கல்வி வளர்ச்சியில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் பங்கு

*மு. மணிமேகலா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்காட் கல்வியியல் கல்லூரி, சேரன்மகாதேவி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5021

## முகவுரை

கல்வி என்பது, குழந்தைகளை உடல் மற்றும் மனவளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புகளை வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வியாளர்கள் கூற்றின்படி இளைய தலைமுறையினரை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. மக்களை மாக்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதும் கல்வி தான். அவ்வகையில் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதிணெண்கீழ்க்கணக்கு நூல்கள் கல்வி வளர்ச்சியில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## கல்வி

மனிதனை மாக்கள் நிலையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது கல்வி மட்டுமே. கல்விக் கற்ற ஒருவனால் மட்டுமே சமுதாயத்தில் சிறந்த அங்கத்தினராக செயல்பட முடியும்.

கல்வி என்பது “ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயற்கையாகவே காணப்படும் முழுமையின் வெளிப்பாடே” கல்வி என்று விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரக் கல்விக்கு அடித்தளமிட்ட காந்தியடிகள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயற்கையாகவே காணப்படும் தெய்வீகத் தன்மையை வெளிக்கொணர்வது” கல்வி என்று குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் மொழி

***“காலங்கள் பிறக்கும் முன் தோன்றிய மொழியே***
***சங்கங்கள் கண்ட சங்க மொழியே***
***காப்பியங்கள் கண்ட காப்பிய மொழியே***
***இதிகாசங்கள் கண்ட இன்ப மொழியே***
***இலக்கணங்கள் கண்ட இடைநில்லா மொழியே”***

தாய்த்தமிழே புகழ்ந்து கொண்டே செல்லலாம். தாய்மொழியை மொழிகளின் காட்சி சாலை என்று அழைக்கிறார் அகத்தியலிங்கம்.

ஐயாயிரம் ஆண்டுகளைத் தாண்டி இன்றும் என்றும் வற்றாத வளத்தோடு இளமையாக செயல்பட்டு கல்விக்கு பெரும்பங்காற்றி வருவது தமிழ் மொழி மட்டுமே. தமிழ் மொழி செம்மொழி என்றழைக்கப்பட்டாலும் அவை தன்னிகரில்லா உயர்தனிச் செம்மொழியாக மட்டுமே எம்மொழியின் துணையின்றும் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### கீழ்க்கணக்கு நூல்கள் கூறும் கல்வி

உலகப்பொதுமறையைத் தந்த வான் புகழ் வள்ளுவர் கல்வியின் தன்மை குறித்து பேசும்போது,

**கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

என்று கூறுவதன் மூலம் தான் கற்ற கல்வி மூலம் பண்பாடு, நடத்தை போன்றவற்றை மாற்றி மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றும் நுட்பம் படைத்தது நவீன கல்வி முறை.

**"ஒருமை கண் தான் கற்ற கல்வி**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**

என்பதன் மூலம் ஏழு பிறப்பிலும் தொடர்ந்து வருவது கல்வி என கல்வியின் பெருமையை வள்ளுவர் எடுத்து இயம்பியுள்ளார்.

### கல்வியின் சிறப்பு

கல்வியின் பயன் குறித்து புறநானூற்று பாடல் ஒன்று (183.3-10) மனிதன் சமூக நிலைபாடிலிருந்து விளக்குகிறது.

**"பிறப்போர் அன்ன உடன் வயிற்றுள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயின் மனந்திரியும்**
**ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடையோன் ஆறு அரசன் செல்லும்**
**பேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்**
**கீழ்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"**
**(183.3.10)**

இங்கு கல்வியின் பெருமையை தற்கால படிநிலை நோக்கில் 1. குடும்பம் (பெற்றோர் /உடன்பிறந்தோர்), 2. சொந்த சமூகத்துக்குள் அரசின் சிறப்பு, 3. மாறுபட்ட சமூக மதிப்பு உடைய பல்வேறு சமூக அமைப்புகளுக்கு இடையே கல்வி கற்றவருக்கு கிடைக்கப்பெறும் சமூக மதிப்பை அறிந்து கொள்ள முடிகிறது.

### கல்வியின் வளர்ச்சி

தற்காலத்தில் கல்வியின் வளர்ச்சியை நோக்கும் போது பண்டைகாலத்திலேயே குருகுலக்கல்வி மூலம் கல்வி கற்றனர் என்பதை பார்க்கமுடிகிறது. குருவிற்கு அருகில் இருந்தும் தேவையான பொருட்களைத் தந்தும் குருவிடம் கல்வி பயின்றதை புறநானூற்றுப் பாடலில் அறியமுடிகிறது.

**"உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"**
**(புறநானூறு - 183:1-2)**

அய்யன் வள்ளுவர் நவீன கல்வியின் நோக்கமாக கருதப்படும் நுண்ணறிலோடு கூடிய கல்வியின் சிறப்பை

**"நீரளவே யாகுமாம் நீராம்பல் தான் கற்றா**
**நூலளவே யாகுமாம் நுண்ணறிவு"**

என்று ஒருவர் தான் கற்றுக் கொள்ளும் கல்வி அறிவினை பொறுத்தே அவர்களுடைய நுட்பமான அறிவுத்திறமை வெளிப்படும் என்று கூறியுள்ளார்.

**"கல்வி கரையில கற்பவர் நாள் சில**
**மெல்ல நினைக்கின் பிணிபல் - தெள்ளிதின்**
**ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்**
**பாலுண் குருகின் தெரிந்து"**

கல்விகள் முடிவில்லாதன. கற்பவர்களுக்கு வாழ்நாள்கள் சில ஆதலால் நீரை நீக்கி பாலையே உண்ணுகின்ற அன்னப் பறவையைப் போல், தெரிந்து ஆராய்ந்து கற்பார்கள்.

### மாசறக் கற்றல்

தற்கால கல்வியில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றாற்போல பல்வேறு பிரிவுகள் உள்ளடக்கி கல்வியை அவரவர். நுண்ணறிவுக்கு ஏற்றாற்போல கற்ற நிலை வளர்ச்சி கண்டிருக்கிறது. மாசற கற்றல் என்பது கல்வி வளர்ச்சியின்

முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக இருப்பதை நான்மனிக்கடிகை நூலில் 72 ஆம் பாடலில்

**“பதிநின்று பல்லார் உறையின் ஒருவன்**
**மதிநின்று மாசறாக் கற்பின் - நுதிமருப்பின்**
**ஏற்றான் வீறெய்தும் இனநிலைதான் கொடுக்குஞ்**
**சோற்றான் வீறெய்துங்குடி”**

குற்றமறும் படி கற்கும் போது தெளிவான அறிவை பெறமுடியும் என கூறப்படுள்ளது.

### இளமையில் கற்றல்

திரியின் சுடருக்கு கல்வி கற்ற இளையோனை ஒப்பிட்டு திரி சிறியதாக இருந்தாலும் உலகத்தார் கை கூப்பி வணங்குதலும், விறகின் எரியும் சுடருக்கு வயதில் பெரியவனாக இருக்கும் மூத்தவனையும் ஒப்பிட்டு விறகின் அழல் பெரிதாக இருந்தாலும் அதனை தொழாமல் இகழ்வது போல கல்வி அறிவு இல்லாத மூத்தவனை கைவிட்டு இளையவனை உலகத்தார் புகழ்வர் என்று கல்வியின் முக்கியத்துவம் அதனை நவீன காலத்திற்கு ஏற்ப மாற்றமடைந்த நிலை கொண்ட கல்வி கற்றலில் உள்ள சிறப்பினை அறியலாம்.

குழந்தைகளை மையமாகக் கொண்ட கல்வியானது இளமையிலேயே தெளிவான கல்வி அறிவு பெறவேண்டும் என்ற பொருளில் திரிகடுக செய்யுளில்

**“முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு**
**தந்தையும் தாயும் வழிபட்டு-வந்த**
**ஒழுக்கம் பொருநெறி சேர்தலில் மூன்றும்**
**விழுப்ப நெறிதூரா வாறு”**

**(திரிகடுகம் :56)**

இளமையில் கல்வி கற்று கல்விப்பொருள் உணர்ந்து பெற்ற தாய் தந்தை போற்றி சான்றோர் செல்லும் நெறியில் செல்வது ஒருவனுக்கு உயிர் என கூறப்பட்டுள்ளது.

### கற்றல் இடர்பாடுகள்- விழிப்புணர்வுகள்

நவீன காலத்தில் இளம் வயதிலேயே வறுமை காரணமாக கல்வி கற்காமல் சிறு குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதன் மூலம் அந்த சிறு குழந்தைகளின் கல்வி கற்றலின் மூலம் கிடைக்கும் அடைவுத் திறன்களை பெறுவது பாதிக்கிறது. அதனால் நவீன கல்வி வளர்ச்சியில் குழந்தைகள் பாதுகாப்பு சட்டம், அனைவருக்கும் கல்வி என்ற சட்ட பாதுகாப்பு மூலம் இளம் வயதிலேயே கல்வி கற்க பிரச்சாரங்கள், விழிப்புணர்வு பேரணிகள் நாடகங்கள் போன்றவை நடத்தப்படுகின்றன. இதனையே பழமொழி நானூறு

**“ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்**
**போற்றுமெனவும் புணருமோ? - ஆற்றச்**
**சுரம் போக்கி உலகு கொண்டார் இல்லையே, இல்லை**
**மரம் போக்கி கடலி கொண்டார்”**

**(பழமொழி நானூறு - பாடல்- 1)**

இந்த பாடலில் மூன்றுரை அரையனார் ஆயத்துறையின் வழியை மிகவும் கடக்கவிட்டு வாணிக சரக்குகளின் மீது ஒருவனிடம் கடமை கொண்டவர் ஓடத்தினின்றும் போக்கிக் கரையேற்றி நின்று ஓடத்தில் ஏறி வந்தவர்களிடம் கூலி கொண்டவர் எவரும் இல்லை கற்கக் கூடிய இளமைப்பருவத்தில் கல்வி கற்காதவன் மூப்பு வந்த காலத்தில் கல்வியைக் கற்று போற்றுவான் என்று சொல்லப்படுவதும் ஒருவருக்கு கூடுமோ? என்று மிக அழகாக இளமைப்பருவ முதலே கல்வி கற்க வேண்டியதன் முக்கியத்துவத்தை கூறியுள்ளார்.

### புரிந்துக் கற்றல்

நவீன கல்வி வளர்ச்சியானது புரிந்து கொண்டு கற்றலுக்கு வழிகோலுகிறது. இதனை அன்றே பழமொழி நானூறு

**“சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்**
**கற்றொரும் கல்லாதே னென்று வழியிரங்கி,**
**உற்றொன்று சிந்தித் துழன்றொன் றறியுமேல்**
**கற்றொறுந்தான் கல்லாதவாறு”**

**(ப.நானூறு:பாடல் - 1)**

ஆசிரியர் சொல்லுந்தோறும், மறதி உண்டாதலால், சோம்பலின்றி, ஒருவன் கற்கும் தோறும், நான் கல்லாதவனென்று

*பின்னையும் பரிந்து அதன் கண்ணே மனம் பொருந்தி, ஒருமைபட சிந்தித்து முயன்று வருந்தி முன்பு அறிந்திராத ஒரு பொருளை அறிவானாயின் கற்கும் தோறும் தான் கல்லாதலாறாகவே கருதுமாறு போலும்.*

*சிறுபஞ்ச மூலம் என்ற நூலில் கற்றலர்களை தேவர்களோடு ஒப்பிட்டும் கல்லாதவர்களை பிசாசுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது.*

***"தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்***
***புதரே முன்பொருள் செய்யாதார் - ஆதரே***
***துன்பமிலேம் பண்டுயாமேவனப்புடையேம்***
***என்பார் இருகால் எருது"***

***(சிறுபஞ்ச மூலம் : 20)***

*மற்றொரு பாடலில் "கல்லாமை தீது" என்று தீமை என்று கல்வி கற்காமல் இருப்பது தீமை என கல்வியின் பெருமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. திரிகடுகம் என்ற நூலில்*

***"கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கருக்கும்***
***மூத்தோரை இல்லா அவைக்களனும் - பாத்துண்ணும்***
***தன்மையிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்***
***நன்மை பயத்தலில்"***

***(திரிகடுகம் : பாடல்10)***

*கற்பிக்கும் ஆசான் இல்லாத ஊர், கல்வி கேள்விகளில் முதிர்ந்தவர்கள் இல்லாத சபையில் இருத்தலும் தீங்கு என கூறப்பட்டுள்ளதைக் காணலாம். திருக்குறளில்,*

***"தொட்டனைத்தூறும்மணற்கேணிமாந்தர்க்குக்***
***கற்றனைத்து ஊறும் அறிவு"***

***(குறாள் 396)***

*மணல் நிறைந்த கிணற்றில் தோண்ட தோண்ட நீர் ஊற்றெடுப்பது போல பல்வேறு நவீன வளர்ச்சி கண்ட நூல்களை கற்கும் போது திறம்பட்ட மேம்பட்ட அறிவு வளர்ச்சி காணும் என்று கூறப்பட்டுள்ளதை அறியலாம்.*

***"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்***
***கண்ணென்ப வாழும் உயிர்க்கு".***

***(குறள் :392)***

*எண்ணும் எழுத்தும் ஆகிய இரண்டும் கொண்ட கல்வி அறிவினை முகத்தின் முக்கிய உறுப்புகளான இரண்டு கண்களுக்கு உவனமயாக இரண்டு வரிகளில் தெளி வாக கல்வி பெற வேண்டியதன் அவசியத்தை அய்யன் கூறியுள்ளார்.*

*கல்வி கற்காதவன் எந்த நிலையில் சமூகத்தில் வைத்து மதிக்கப்படுவான் என்பது இந்த நவீன காலத்தில் நாம் அறிந்திருக்கிறோம். இதனை சங்க இலக்கிய காலத்தில் வள்ளுவன்*

***"ஊர் என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்***
***களர் அனையர் கல்லாதவர்"***

***(குறள் : 406)***

*கல்வி அறிவு இல்லாதவர் உயிரோடு இருக்கின்றார் என்று கூறலாமே தவிர கல்லாதவர்கள் ஒரு பயிரும் விளைய முடியாத களர் நிலத்திற்கு ஒப்பாவதர். கல்வி கற்காதவர் விலங்குகளோடு ஒப்பிடப்படுவதையும் திருக்குறளில் காணலாம். முதுமொழிக் காஞ்சியில் அறிவு பத்தில் "கற்றதுடைமை காட்சியினறிய" என்று ஒருவன் கல்வி பயின்றதை அவன்தன் அறிவினாலேயே அளந்து அறிவர் என்று கூறி கல்வியானது பல்வெறு காலத்தின் சுழலுக்கு ஏற்ப வளர்ந்து பல்வேறு கிளைகள் கொண்ட துறையாய் வளர்ந்திருப்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.*

*அக்கால குருகுலகல்வி நிலையில் இருந்து கல்வி கற்கும் மாணவர்களின் மனநிலை, சமூக சுழல் குடும்ப சுழல் ஆகியவைகளை அறிந்து அவர்கள் இயல்பாகவே தானாகவே முயன்று கற்றல், ஆர்வமுடன் கற்றல் என்ற நிலையில் கல்வியானது நவீன யுக்திகளை பயன்படுத்தி கற்கும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. அறியாமையை போக்கவல்லது கல்வி. இதனை நாலடியார் பாடலில்,*

***"இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்***
***தன்மை விளக்குமால் தாமுளராக் கேடிண்றால்***
***எம்மை யுலகத்தும் யாங்காணோய் கல்வி போல்***
***மம்மரறுக்கும் மருந்து"***

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்ற யவை"**

என்ற குறட்பாக்கள் மூலமாக கல்வியின் சிறப்பை அறிய முடிகிறது.

## நிறைவாக

கற்றவர் புகழை இம்மையிலும் மறுமையிலும் வாழச் செய்து அறியாமை எனும் நோயைப் போக்கக் கூடிய மருந்து இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை என்று கல்வியின் சிறப்பினைத் தெளிவாக காணலாம். எனவே ஒவ்வொருவரும் கல்வியை பெறுவதன் மூலம் சமூகத்தில் பண்பாடு உள்ளவர்களாய், சமுதாயத்தில் தன் பங்களிப்பை செய்பவர்களால், உள்ளம் தெளிந்தவர்களாய் வாழ முடிகிறது. கல்வியானது நம் இறப்பு வரை தொடரக்கூடியது. பதினெண்கீழ்கணக்கு நூல்கள் நம் தற்கால கால கல்வி வளர்ச்சியில் கல்வியின் பயன், கல்வி பயிலுவதன் முக்கியத்துவம் குறித்து பெரும்பங்கு ஆற்றியுள்ளது என்பதை மேற்கண்ட செய்திகளில் இருந்து அறிந்து கொள்ளமுடிகிறது. கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை கீழ்க்கணக்கு நூல்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

## சான்றாதாரம்

1. பதினெண் கீழ்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், தொகுப்பாசிரியர் ஞு.கௌமாரிஸ்வரி, புலவர் வெற்றியழகன் அவர்களின் ஆய்வுரையுடன்.